செய்தி வெளியீடு எண்: 113 நாள்: 15.02.2018

# செய்தி வெளியீடு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் இயங்கும் அரசு / தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆகஸ்ட் 2014 முதல் ஆகஸ்ட் 2017 வரை சேர்க்கை செய்யப்பட்ட, மாணவர்கள் சேர்க்கையின் போது வழங்கப்பட்ட விபரங்களின் அடிப்படையில் மத்திய அரசால் தேர்வு நுழைவுச்சீட்டு, மதிப்பெண் சான்றிதழ் மற்றும் தேசிய தொழிற் சான்றிதழ் ஆகியவை online-ல் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சியாளர்களின் பெயர், தந்தையின் பெயர், தாயின் பெயர் மற்றும் பிறந்த தேதி ஆகியவை பதிவேற்றத்தின் போது பிழைகளுடன் பதிவேற்றம் செய்யப்பட்டு இருந்தால், அப்பிழைகளை சரிசெய்ய இயலாத நிலை இருந்து வந்தது. தற்பொழுது மத்திய அரசால் அப்பிழைகளை சரிசெய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பயிற்சியாளர்கள் தங்களது அசல் சான்றிதழ்களோடு (NTC) தங்கள் இருப்பிடத்திற்கு அருகில் உள்ள கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு அலுவலகத்திற்குச் சென்று தங்களுடைய பள்ளி கல்வி சான்றிதழ்/உரிய ஆவணங்களை காண்பித்து திருத்தம் செய்ய விண்ணப்பிக்கலாம். பயிற்சியாளர்கள் **22.2.2018–க்குள்** இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முகவரிகள்

1. மண்டல பயிற்சி இணை இயக்குநர்,
   அரசினர் தொழிற் பயிற்சி நிலைய மாணவர் விடுதி,
   அழகர் கோவில் மெயின் ரோடு, மதுரை–07.
2. மண்டல பயிற்சி இணை இயக்குநர்,
   மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகம்,
   NGO ‘ B’காலனி, பெருமாள்புரம் அஞ்சல்,
   திருநெல்வேலி- 627007
3. மண்டல பயிற்சி இணை இயக்குநர்,
   மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகம்,
   அரசினர் தொழிற் பயிற்சி நிலைய பின்புறம்,
   ஜி.என். மில்ஸ் போஸ்ட், கோயம்பத்தூர் -641 029
4. மண்டல பயிற்சி இணை இயக்குநர்,
   மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகம்,
   அரசினர் தொழிற் பயிற்சி நிலைய Multi Strayed Building,
   முதல் மாடி, காஜாமலை, திருச்சி – 620 020.
5. மண்டல பயிற்சி இணை இயக்குநர்,
   அரசினர் தொழிற் பயிற்சி நிலைய பின்புறம்,
   கிண்டி, சென்னை–600 032

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**